# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி: 044-29515590


**ஆணை நாள் 01.07.2026**

**முன்னிலை**
திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,
மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 8298/H/2024**

திரு ச.ரமணகாந்தன் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் (கணக்கு)
வேலூர் மாநகராட்சி
வேலூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

கோரிய தகவல்: மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 25.03.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் வேலூர் நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தாத் தொகை 148 மாதங்கள் முழுவதும் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு அசல் தொகை அதற்கான வட்டித்தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகையும் மற்றும் சேமநல நிதித் தொகைக்கான வட்டித் தொகையினை வழங்குமாறும், வருங்கால சேமநலநிதி தொகைக்கு வட்டித் தொகை வழங்குமாறும் கோரி மொத்தம் 4 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் அளித்த தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 19.06.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு இரா.பரந்தாமன் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திரு. S.K.சுரேஷ்குமார், கண்காணிப்பாளர், வேலூர் மாநகராட்சி அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

## ஆணை

இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 25.04.2024 மற்றும் 30.06.2026 தேதியிட்டக் கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து அதற்குண்டான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர் தனக்கு நாளது வரை சேமநலநிதிக்கான வட்டி வழங்கப்படவில்லை என தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- *இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு சேமநலநிதிக்கான அசல் மற்றும் வட்டி வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுத்து, அதனை வழங்கியது தொடர்பான தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக ஆணையத்திற்கு 04.08.2026 அன்று நேரடியாக சமர்ப்பிக்குமாறும், தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA 8298/H/2024

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

**பொதுத் தகவல் அலுவலர்/**
**கண்காணிப்பாளர் (கணக்கு)**
**வேலூர் மாநகராட்சி**
**வேலூர் மாவட்டம் 632 001.**

மேல்முறையீட்டாளர்

**திரு இரா.பரந்தாமன்**
**ஆணையாளர் (ஓய்வு)**
**வாலாஜா பேட்டை நகராட்சி**
**நெ.79, வி.ஐ.பி.வாலாஜா ஹைவேசிட்டி லே அவுட்**
**தெண்கடப்பந்தாங்கல் கிராமம்**
**வாலாஜாப்பேட்டை 632 513.**

**Copy to : File**
**VM/PA**